Volume 4 Issue 2 February 2023 E-ISSN: 2582-2063

# தமிழகத்தில் ஆலயப் பிரவேசம் - ஓர் ஆய்வு

**C. கடற்கரைமொன்டி**
பி.ஏ.இரண்டாம் ஆண்டு, வரலாற்றுத்துறை
நாகரத்தினம் அங்காளம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மதுரை.

**முனைவர் ரா. தாமரைக்கண்ணன்**
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை
நாகரத்தினம் அங்காளம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மதுரை.

**முன்னுரை:**

ஆலயப்பிரவேசம் என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்நதவர்களைத் தவிர மற்ற சமூகத்தினர் ஆலயத்திற்குள் செல்ல அனுமதி இல்லை என்ற நிலை தமிழகத்தில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை இருந்து ந்தது. இந்த அவல நிலையை மாற்ற போராடியவர்களில் தந்தை பெரியார், எஸ்.கண்ணப்பர் திராவிடன் இதழின் ஆசிரியர், ஜே.என் இராமநாதன் சுயமரியாதை இயக்கத் தலைவர்களில் ஒருவர். கி.ஆ.பெ.விசுவநாதம் சுயமரியாதை இயக்கததை சேர்ந்தவர், முத்தூசிகுருசாமி, பெரியாரின் துணைவியார் நாகம்மை, பொனன்னம்பலனார், ஈரோடு ஈஸ்வரன், மஞ்ச மேட்டான் மகன் பசுபதி, கிருஷ்ணம்பாளையம் கருப்பன், மதுரை வைத்தியநாத ஐயர் போன்றோரின் சீரிய போராட்டங்களின் மூலம் அனைத்து மக்களுக்குமான ஆலயப் பிரவேசம் தமிழகத்தில் நடந்தேரியது. மேலும் மகாத்மா காந்தி அவர்களும், இராஜாஜியும் இதற்கு உறுதுணையாக இருந்து வந்துள்ளனர்.

**தமிழகத்தில ஆலயப் பிரவேசம்:**

தமிழகத்தில் ஆலய நுழைவு சாரந்து தொடங்கபப்பட்ட கிளர்ச்சியானது சுசீந்தரம் கோவிலில் நடைபெற்றது இந்த நிகழ்வு 1926 ஆம் வருடம் நடைபெற்றது. இந்த நிகழ்வு 1926 ஆம் வருடம் நடைபெற்றது.

**முதல் கோவில் நுழைவுப் போராட்டம்:**

தமிழகத்தில் கோவில் நுழைவு போராட்டம் திருவண்ணாமலை கோவிலில் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தை திராவிடன் என்ற இதழின் ஆசிரியரான ஜே. எஸ்.கண்ணப்பர் என்பவர் 1927 ஆம் ஆண்டு பிப்ரவரி ஏழாம் நாள் தாழ்த்தப்பட்டோர்கள் என்று சமுதாயத்தில் ஓரங்கட்டப்பட்டவர்களை கொண்டு தொடங்கினார். இந்த நிகழ்வில் கண்ணப்பர் கோவிலுக்குள்ளேயே வைத்து பூட்டிவைத்தனர். பின்னர் அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது இந்த வழக்கு ஓராண்டுக்கு மேலாக நடைபெற்றது. இறுதியில் கண்ணப்பருக்கு சாதகமாக தீர்ப்பு வந்த்து. இதுவே ஆலய நுழைவுப் போராட்டத்தில் கிடைத்த துமல் வெற்றியாக பார்க்கப்பட்டது. இந்த தீர்ப்பு பற்றி 1928ம் ஆண்டு மே மாதம் ஆறாம் நாள் குடியரசு இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**சுயமரியாதை இயக்கத்தில் ஆலய நுழைவு போராட்டம்:**

சுயமரியாதை இயக்கத்தை ஈ.வே.இராமசாமி 1925ஆம் ஆண்டு அப்போதைய இராஜதாணியில் தொடங்கினார். தமிழகத்தில் ஆலய நுழைவு போராடட்டத்தைப் பொருத்த வரையில் 1926 ஆம் ஆண்டு சுசீந்திரத்தில் கிளர்ச்சியை துவங்கினர். பின்பு 1927 ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான ஜே.என்.இராமநாதன் தாழ்த்தப்பட்டோர்களை திரட்டி திருச்சிராப்பள்ளி தாயுமானவர் மலையில் உள்ள கோவிலுக்கு படியேறி வழிபாடு நடத்த முறபட்டபோது தடியினால் அடித்து பாறைப்படிகளில் உருட்டிவிடப்பட்டனர். இந்த நிகழ்வை அன்றைய கேசரி இதழில் பிரசுரம் செயதிருந்தது.

பிறகு சுயமரியாதை இயக்கத்தின் செயல்பாட்டாளரான கி.ஆ.பெ. விசுவநாதர் தலைமையில் 1927ம் ஆண்டு தோரயமாக ஆயிரம் பேர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் அனைத்து சாதியினரும் கலந்து கொண்டனர். மயிலாடுதுறையில் மயூரநாதசுவாமி கோவிலில்

ஆலயநுழைவு செய்ய போராட்டக்காரர்கள் முற்பட்டனர். ஆனால் கோவில் நிர்வாகிகள் நுழைவு வாயிலையும் கோவிலின் கருவறையையும் பூட்டி விட்டனர். ஆனாலும் போராட்டக்காரர்கள் கோவிலின் பக்கவாட்டு கதவுகளில் சென்று திருநாவுக்கரசரின் "மாணிக்கதவம் தாழ் திறவாய்" என்ற பாடலை பாடி புரட்சி செய்தனர்.

**திருச்சி மலைக்கோட்டை கோவிலில் பிரவேசம்**

1928ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாலைக்கோட்டை கோவிலில் ஆலய நுழைவிற்கான முயற்சிகள் மேற்கொள்ளபடபட்டன. அதே ஆண்டு திருவானைக் கோவிலிலும் ஆலய நுழைவப் போராட்டம் நடத்தப்பட்டது.

**ஈரோட்டில் ஆலய பிரவேசம்**

ஈரோட்டில் கோட்டை ஈஸ்வரன் கோவிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்களை ஆலய பிரவேசம் செய்ய அனுமதி தரவேண்டும் என்று அப்போதைய தேவஸ்தான கமிட்டி தலைவரான தந்தை பெரியாரிடம் கோரிக்கை வைத்து தீர்மானம் நிறைவேற்றபடபட்டது. இதனை நடைமுறைப்படுத்த குத்தூசி குருசாமியும் தந்தை பெரியாரின் துணைவி நாகம்மையும் சேர்ந்து செயல்படுத்த துணிந்தனர். மேலும் ஈரோடு கச்சேரி வீதி ஈஸ்வரன், பொன்னம்பலனார், பசுபதி, கிருஷ்ணம்பாளையம், கருப்பன் போன்ற மூன்று தாழ்த்தப்பட்டவர்கள் நெற்றியில் திருநீறு இட்டு தெருக்கிளல் அழைத்துச் செல்லப்பட்டனர். மேலும் தேங்காய், பூ, பழம் அடங்கிய தட்டுகளுடன் கோவிலுக்குள் நுழைந்தனர். இவர்கள் கோவிலுக்குள் சென்றவுடன் வெளிக்கதவை பூட்டிவிட்டனர். இரண்டு நாட்கள் வரை கதவு திறக்கப்படவில்லை. பெரியார் கோவை சென்று திரும்பிய பிறகே கோவில் திறக்கப்பட்டது. இவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு தொடர்பான செய்திகளை 1929 ஆம் ஆண்டு ஏப்ரல் 21ம் நாள் இதழில் பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த வழக்கு ஒன்பது மாதங்கள் நடந்து அதன் பிறகு ஈஸ்வரன், கருப்பன், பசுபதி போன்றவர்களுக்கு ரூபாய் அறுபது அபராதம் விதிக்கப்பட்டது. ஈஸ்வரன் என்பவர் மட்டும் அபராதத் தெகையை கட்ட மறுத்துவிட்டார். அதனால் சிறையில் அடைக்கப்பட்டார். இவரின் செய்கையை பராட்டி குடியரசு இதழில் உங்களது இந்த செயல் ஆலய நுழைவுப் போராட்டத்தின் சரித்திரத்தில் ஈஸ்வரன் பெயர் முதல் பெயராக போற்றப்படும் என்று பாராட்டி எழுதியது இந்த வழக்கின் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றம் சென்னையில் மேல் முறையீடு செய்யப்பட்டது. இந்த காலகட்டத்தில் சுசீந்திரம் கோவில் தெருக்களில் நடந்து சென்றதாக ஒடுக்கப்பட்ட மக்கள் மீது வழக்குத் தொடர்ந்திருந்தனர். இந்த வழக்கும் ஒடுக்கப்பட்டோருக்கு தண்டனை வழங்கியிருந்தது. இந்த வழக்கும் மேல் முறையீடு செய்யப்பட்டிருந்தது. சென்னை உயர்நீதிமன்றம் இவ்விரு வழக்குகளையும் விசாரித்து தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தது. இந்த நிகழ்வு தமிழக மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றதோடு இல்லாமல் தீண்டாமை என்ற கோட்பாட்டை வேரோடு பிடுங்கி எறிய மக்களைத் தூண்டுதலாக அமைந்தது.

**ஈரோடு மாநாடு:**

பெரியார் 1922ம் ஆ்ணடு திருப்பூரில் காங்கிரஸ் மாநாட்டில் கோலில் நுழைவு உரிமைகள் வேண்டுமெனத் தீர்மானம் கொண்டுவந்தார். அதன்பிறகு ஈரோட்டில ஒரு மாநாடு கூட்டப்பட்டது. இந்த மாநாட்டிலும் ஆலய நுழைவுக்கு ஆதரவாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த மாநாடு பெரியாரின் சுய மரியாதை இயக்கத்தினால் கூட்டப்பட்டது. இதன் விளைவாக சயமரியாதை இயக்கத்தின் தொண்டர்கள் தமிழகத்தில் பல்வேறு இடங்கிளல் ஆலய நுழைவப் போராட்டங்களை மேற்கொண்டனர். காரைக்குடியில் சொ. முருகப்பரும், தலைச்சேரியில் ப.ஏ. சௌந்திரபாண்டியனும் ஈரோட்டில்கண்ணப்பரும், திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதியம் மயிலையில் கபாலிசுவரர் கோவிலில் சுப்பிரமணியனும் திருஞானசம்பந்தன் தலைமையிலும் ஒடுக்கப்பட்டோரின் ஆலயப்பிரவேசம் மேற்கொண்டு ஏராளமானோர் கைதாகினர்.

**சட்டமன்றத்தில் முதல் ஆலய நுழைவு மசோதா:**

சென்னை சட்டமன்றத்தில் 1932ம் ஆண்டு நவம்பர் மாதம் ஒன்றாம் நாள் முனைவர்.சுப்பராயன் என்பவர் கோவில் நுழைவு பற்றிய மசோதாவை கொண்டு வந்தார். இந்த மசோதா கொண்டு வருவதற்கு முன்பேவலியுறுத்தியிருந்தார். பெரியாரின் இந்த வேண்டுகோல் குடியரசு இதழில்

தலையங்கமாக பிரசுரம் ஆகியிருந்தது. இந்த மசோதா கொண்டு வந்த பிறகு ஆலய நுழைவுக்க ஆதரவு பெருகி வந்தது.

**மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் ஆலய நுழைவுப் போராட்டம்**:

தமிழழகத்தில் நடைபெற்ற ஆலய நுழைவுப் போராட்டங்களில் இருந்து மதுரை ஆலய நழைவுப் போராட்டம் சற்றே வேறுபட்டது என்றே கூறவேண்டும். ஏனென்றால் கோவிலில் அன்றைய சூழலில் ஆதிக்கம் செலுத்திவந்தவர்கள் பிராமணர்களே. ஆனால் பிராமணர் அல்லாதவரும், ஒடுக்கப்பட்டோரும், தாழ்த்தப்பட்டோரும் ஒன்று கூடி ஆலய நுழைவை மேற்கொண்ட காலத்தில் பிராமண சமுதாயத்தில் இருந்து தாழ்த்தப்பட்டோருக்காக போராட வந்த ஒரு உன்னதமானவரே மதுரை வைத்தியநாத ஐயர் ஆவார். இவர் 1939ம் ஆண்டு ஜுலை 8ம் நாள் மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் வைத்தியநாத ஐயர் தலைமையில் ஆலய நுழைவு சம்பவம் நடைபெற்றது. இந்த ஆலய பிரவேசத்தில் தமிழ்நாடு ஹரிஜன சேவா சங்க செயலாளர் எல்.என். கோபால்சாமி, P.கக்கன், உசிலம்பட்டடி முத்து, பூவலிங்கம், சின.னைய, முருகானந்தம், வைத்தியநாத ஐயருடன் சேர்ந்து ஆலய பிரவேசம் செய்து வரலாற்றின் அழியா இடத்தை பிடித்தனர். இதற்கு உறுதுணையாக அன்றைய மீனாட்சியம்மன் கோவிலின் அறங்காவலர் ஆர்.எஸ். நாயடு இருந்து உதவினார்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் பங்கு:

மதுரையில் நடைபெற்ற இந்த மாபெறும் ஆமுலய நழைவு போராட்டத்திற்கு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆதரவு தெரிவித்ததா. மேலம் தனது தேரவோடு நில்லாமல் தனது தொண்டாகளையம் வைத்தியநாத தஜயருக்கு உறுதுணையாக அனுப்பி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகம். இந்த ஆலய நுழைவுப் போராட்டதினை எதிர்த்து வைதீகர்கள் வழக்கு தொடுத்தனர். ஆனால் ராஜாஜி அவர்கள் முன்தேதியிட்டு அரசு ஆலய பிரவேசம் என்ற சட்டத்தை கொண்டு வந்து ஆலய பிரவேசம் செல்லும் என்று உத்தரவிட்டார்.

**முடிவுரை:**

தமிழகத்தைப் பொருத்தவரையில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதலே ஆலய நுழைவு தொடர்பான போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றதில் எண்ணற்ற ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமல்லாமல் சமுதாயத்தில் நல்ல நிலைமையில் இருந்த பெரியோர்களமம் இன்னல்களை அடைந்துள்ளனர். மேலும் அனைத்து வகையான அடக்குமுறைகளையும் தாண்டி பெரியார், வைத்தியாநாத ஐயர், முத்துராமலிங்கத்தேவர் மற்றும் சுயமரியாதை இயக்கத் தொண்டர்களின் சீரிய முயற்சியாலும் பேராட்டங்களாலும் ஆலய நழைவ சாத்தியமானது.

## References


1. The Hindu, Remembering Vaidyanatha Iyear and Temple Entry Movement, March 12, 2013 Madurai.
2. குடியரசு இதழ், 1928
3. கேசரி இதழ்,1927
4. ஸ்டாலின் குணசேகரன், ‘விடுதலைப்போரில் தமிழகம்’ பாகம்-2.
5. நா.மா.ரா.சுப்பராமன், ‘மதுரை காந்தி’அல்லயன்ஸ் பதிப்பகம், சென்னை
6. சிதம்பரம். பி, ஆலய பிரவேச உரிமை, திராவிடர் கழக வெளியீடு சென்னை.
7. வாலாசா வல்லவன், கோயில் நுழைவுப் போராட்டங்களில் திராவிடர் இயக்கங்களின் பங்களிப்பு, அருள்பாரதி பதிப்பகம், சென்னை.
8. வீரமணி.கி. கோவில் நுழைவுப் போராட்டம், திராவிடர் கழக வெளியீடு, சென்னை.
9. பரமசிவன்.தொ, தெய்வங்களும் சமூக மரபுகளும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.